# நிமிடமும் மணியும்

தினகரனும் மதிமாரனும் நண்பர்கள். இருவரும் மாலை பள்ளியிலிருந்து நான்கு முப்பது மணிக்கு வருவார்கள். சிற்றுண்டி உண்பதற்கு கால் மணி நேரமும் விளையாடுவதற்கு முப்பது நிமிடமும் எடுத்துக்கொள்வார்கள்.



பிறகு பதினைந்து நிமிடம் நடந்து ஐந்தரைக்குக் கூடைப்பந்து மைதானத்தை அடைவார்கள். ஏழு மணி முதல் எட்டு மணி வரை வீட்டுப்பாடங்களைச் செய்வார்கள். எட்டே முக்காலுக்கு உணவருந்தி ஒன்பது மணிக்குத் தூங்கச்செல்வார்கள்.

மேற்கண்ட பத்தியைப் படித்ததும், பாண்டியன், ஒரு மணிக்கு எத்தனை நிமிடம்? எனக் கேட்டான். அறுபது நிமிடம் என்று ஆசிரியர் கூறினார். மேலும் அவனுக்கு நன்றாகப் புரியும்படி கரும்பலகையில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

ஒரு மணி நேரம் = 60 நிமிடங்கள்

முக்கால் மணிநேரம் = 45 நிமிடங்கள்

அரை மணி நேரம் = 30 நிமிடங்கள்

கால் மணி நேரம் = 15 நிமிடங்கள்

# நிமிடமும் மணியும்

பயிற்சிகள்:-

<u>கோடிட்ட இடத்தை நிரப்புக</u>

அ. -------------, ------------- நண்பர்கள்.

ஆ. நண்பர்கள் விளையாடுவதற்கு எடுத்துக்கொண்ட நேரம் -----------------.

இ. பள்ளியிலிருந்து வரும் நேரம் -------------.

<u>பொருத்துக</u>

| | |
|---|---|
| 15 நிமிடங்கள் | முக்கால் மணி நேரம் |
| 60 நிமிடங்கள் | கால் மணி நேரம் |
| 45 நிமிடங்கள் | அரை மணி நேரம் |
| 30 நிமிடங்கள் | ஒரு மணி நேரம் |

<u>வினாக்கள்</u>

அ. தினகரனும் மதிமாறனும் நான்கு முப்பது மணி வரை எங்கு இருப்பார்கள்?

ஆ. ஆசிரியர் பாண்டியனுக்கு, நேரம், மணி குறித்துத் தெளிவுபடுத்தியதை எழுது?